


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தோட்டக்கலைத்துறை சார்பில் திருவட்டார் வட்டாரம் வலியாற்றுமுகம் பகுதியில் திரு. லியோடாஸ்லின்ராஜ் என்ற விவசாயியின் நிலத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ், ரூ. 26,250/- மானியத்தில் அமைக்கப்பட்டுள்ள அன்னாசி பரப்பு விரிவாக்கத்தினை இன்று (21.12.2016) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு. எம்.நிஜாமுதீன் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 899/2016 நாள்: 21.12.2016

**தோட்டக்கலை இயக்கத்தின்கீழ், அன்னாசி செடிகள் விரிவாக்க செய்ய 203 பயனாளிகளுக்கு ரூ.57.03 இலட்சம் மானியம் அரசால் வழங்கப்பட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், இன்று (21.12.2016) ஆய்வின் போது தகவல்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், வெட்டுர்ணிமடம் பகுதியில் வேளாண்மைப் பொறியியல் துறையால் ரூ. 3 இலட்சத்தில் அரசு மானியத்தில் திருமதி. கிருஷ்ணம்மாள் என்ற விவசாயியின் நிலத்தில் நிறுவப்பட்டுள்ள சூரியசக்தி உலர்த்தியை ஆய்வு செய்தார்.

அதனை தொடர்ந்து, பேச்சிப்பாறை அரசு தோட்டக்கலைப் பண்ணையில் வேளாண்மைப் பொறியியல் துறையால் அமைக்கப்பட்ட நுண்ணீர் பாசன அமைப்புகள், உலர்களம் மற்றும் கம்பி வேலை அமைப்புகளையும், தோட்டக்கலைப் பண்ணை பணிகளையும், அங்கு இலவங்கப்பட்டை பிரித்தெடுக்கும் முறையினையும், பேச்சிப்பாறை அணையின் நீர் மட்டத்தினையும் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

பின்னர் திருவட்டார் வட்டாரம் வலியாற்றுமுகம் பகுதியில் திரு. ஜினோடாஸ்டின்ராஜ், த/பெ. சுந்தர்ராஜ், மலவிளை, செருபாலூர் என்ற விவசாயியின் நிலத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கத்தின்கீழ், (2015-16) ஒரு ஹெக்டர் பரப்பளவுக்கு ரூ.26,250/- அரசு மானியம் மூலம் அன்னாசி விரிவாக்க நிலத்தினை பார்வையிட்டு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழக அரசு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக பல்வேறு மானியங்கள் மூலம் விவசாய கருவிகள் வழங்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலமாக தேசிய தோட்டக்கலை இயக்கம், பயிர் பரப்பு விரிவாக்கம் திட்டத்தின் மூலம் அன்னாசி செடிகள் 2011 - 12 ஆம் நிதியாண்டில், 50 ஹெக்டர் பரப்பளவில் ரூ.12.19 இலட்சம் மதிப்பிலான மானியம் 56 பயனாளிகளுக்கும், 2012 - 13 ஆம் நிதியாண்டில் 35 ஹெக்டர் பரப்பளவில் ரூ. 2.84 இலட்சம் மதிப்பிலான மானியம் 33 பயனாளிகளுக்கும், 2014 - 15 ஆம் நிதியாண்டில் 60 ஹெக்டர் பரப்பளவில் ரூ.15.75 இலட்சம் மதிப்பிலான மானியம் 40 பயனாளிகளுக்கும், 2015 - 16 ஆம் நிதியாண்டில் 100 ஹெக்டர் பரப்பளவில் ரூ.26.25 இலட்சம் மதிப்பிலான மானியம் 74 பயனாளிகள் என மொத்தம் 203 பயனாளிகளுக்கு 245 ஹெக்டர் பரப்பளவில் அன்னாசி செடிகள் விரிவாக்க செய்ய அரசால் ரூ. 57.03 இலட்சம் மதிப்பிலான மானியம் வழங்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

ஆய்வின்போது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு. எம்.நிஜாமுதீன், தோட்டக்கலை உதவி இயக்குநர் திருமதி. யோ.ஷீலாஜாண், வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர்கள் பொறி ஆனந்தபாபு, பொறி ராதாகிருஷ்ணன், உதவிப்பொறியாளர்கள் பொறி மகேஷ், பொறி கென்னடி, பொறி அமல்ராஜ் மற்றும் பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் பொறி மோகன்தாஸ், தோட்டக்கலை அலுவலர்கள் திரு. சரவணன், திரு. மணிகண்டன், ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.